**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.3–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(1,2 வாதிகள் ஆஜர் இல்லை . 3ம்பிரதிவாதி ஆஜர். 1,2, 4 முதல் 6 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் 3ம்பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். 1,2, 4முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை)

அ.வ.எண்.856/2022

பி.வா.சா.3 தெய்வசிகாமணி த /பெ மாரப்பகவுண்டர்

<u>வாதி தரப்பில்குறுக்குவிசாரணை :–</u>

1. என்னுடைய வீட்டிற்கும் தாவா சொத்திற்க்கும் இடையே சுமார் 300 மீட்டர் தொலைவு இருக்கும். தற்போது நான் குடியிருக்கும் வீட்டில் 5 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னுடைய விவசாய நிலங்கள் 1 1/2 ஏக்கர் ரங்கபாளையத்தில் அமைந்துள்ளது. அதில் தென்னை, வாழை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறேன். இதற்க்கு முன்பு நீதிமன்றத்தில் வேறு ஏதாவது வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. நானும், 1ம்பிரதிவாதியும் உறவினர்கள் என்றால் இல்லை. 1ம்பிரதிவாதி தாவா சொத்திற்க்கு வந்த பிறகு தான் எனக்கு அவரை தெரியும். தாவா சொத்தை விற்பனைக்கு உள்ளதாக இருப்பதை யார்மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் அருகில் இருக்கும் புரோக்கர் கண்ணன் மூலம் தெரிந்துகொண்டேன். புரோக்கர் கண்ணன் மூலமாக தான் 1ம்பிரதிவாதியிடன் பேசினேன். தாவா சொத்தின் வில்லங்கம் பார்த்து கிரையம் வாங்கினேனா என்றால் வில்லங்கம் பார்த்து தான் கிரையம் வாங்கினேன். எத்தனை வருடங்களுக்கு வில்லங்கம் போட்டு பார்த்தேன் என்றால் சரியாக பார்க்கவில்லை விஸ்வநாதன் பெயர் கடைசியாக வந்தது.

3. தாவா சொத்து இன்றைய தேதியில் சுமார் ரூ.2,500/– சதுரடிக்கு விற்பனை ஆகும் என்றால் சரியல்ல. நான் வாங்கும்போது மொத்தமாக ரூ.4,50,000/– ஆகும். அனைத்தும் நான் ரொக்கமாக தான் கொடுத்தேன். மீண்டும் சாட்சி ஐ.ஓ.பி வங்கியில் இருந்து பணம் பரிவர்த்தனை ஈரோடு,

குமலன்குட்டையிலுள்ள கரூர்வைசியா வங்கிக்கு மாற்றி கொடுத்தேன். கையில் ரொக்கமாக ரூ.10,00,000/— கொடுத்திருப்பேனா என்றால் இல்லை.
4. வருமான வரி நான் செலுத்தி வருகிறேன். 2022ம் வருடம் வருமான வரி கணக்கு மேற்கண்ட பணபரிவர்த்தனை தொடர்பாக ஆவணங்கள் நீதிமனறத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் தாக்கல் செய்ய இயலும். வில்லங்க சான்றிதழில் வாதியின் பெயர்கள் இருந்ததை தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. என்னுடைய பிரமாணபத்திரிக்கையில் பழைய பத்திரங்கள் பற்றி சொல்லியுள்ளேன் தற்போது வழக்கிற்காக பொய்யாக ஞாபகமில்லை என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.
5. இதற்கு முன்பு வேறு சொத்துக்கள் நான் கிரையம் வாங்கியுள்ளேன். ஒரு சொத்தை கிரையம் வாங்குவதற்க்கு முன்பு வழக்கறிஞர் அறிவுறுத்தல் தேவை என்றால் சரியல்ல. பத்திர எழுத்தர் அறிவுறுத்தல் இருந்தாலே போதும். தாவா சொத்தை நான் 1ம்பிரதிவாதியிடம் கிரயம் பெற்றப்போது அவரின் முன்பாத்தியரான வாதிகளை பற்றி 1ம்பிரதிவாதியிடமோ அல்லது வாதிகளிடம் நேரிடையாகவோ விசாரணை மேற்கொண்டனா என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதயிடம் மட்டுமே தாவா சொத்தை பற்றி விசாரித்தேன் வாதிகள் யார் என்றே எனக்கு தெரியாது.
6. தாவா சொத்தின் மூல ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால் என்னிடம் தான் உள்ளது. மூல ஆவணங்கள் பார்த்து படித்து தாவா சொத்தை பற்றி தெரிந்துகொண்டேனா என்றால் ஆவணங்கள் பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். தாவா சொத்துக்களுடைய ஆவணங்கள், வில்லங்கள் ஆகியவை முறையாக பார்க்காமல் கிரையம் பெற்றுள்ளதால் நான் நல்லன்ன கிரயதாரர் இல்லை என்று சொன்னால் சரியல்ல.
1,2, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.